# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 24

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்


**எஸ். ரகுபதி**

சட்டத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1-2 |
| 2 | துறையின் படிநிலை | 2-5 |
| 3 | சிறை நிருவாக பிரிவுகள் | 6-10 |
| 4 | மனித வள மேம்பாடு | 11-16 |
| 5 | சிறை வகைப்பாடு | 17-19 |
| 6 | சிறை பாதுகாப்பு | 19-28 |
| 7 | சிறைகளின் அடிப்படை வசதிகள் | 28-49 |
| 8 | சிறைவாசிகளின் சீர்திருத்தம் | 49-67 |
| 9 | மனமகிழ் நிகழ்வுகள் | 67-71 |
| 10 | பணியாளர் நலன் | 71-82 |
| 11 | புதிய செயல்பாடுகள் | 82-91 |
| 12 | முடிவுரை | 91-92 |
| | பிற்சேர்க்கை I – II | 93-105 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 24

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2023–2024

## I. முன்னுரை

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும் ––** (திருக்குறள்–388)

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை குற்றவியல் நீதி முறை அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பெற்று விளங்குவதுடன், சிறைவாசிகளின் தண்டனையினை நிறைவேற்றுதல் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் அளிப்பதன் மூலம் அமைதியான சமூகத்தை கட்டமைப்பதில் முக்கிய கருவியாக திகழ்கிறது. சிறைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் மனந்திருந்திய

பயனுள்ள தனிநபர்களாக சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைத்தல் ஆகிய மிக உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்துறை சிறைவாசிகளின் உரிமைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உலக தரத்திற்கு இணையாக உயர்த்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில், சிறைவாசிகளின் திறன் பயிற்சி மற்றும் மன மாற்றத்திற்காக பல புதுமையான முயற்சிகளை சமகால தொழிற்நுட்ப வளர்ச்சிக்கேற்ப இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## II. துறையின் படிநிலை

அரசின் உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைக்கு காவல்துறை தலைமை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில் ஒரு சிறைத்துறை துணைத் தலைவரும், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை

மற்றும் கோவை ஆகிய ஐந்து இடங்களில் சரக சிறைத்துறை துணைத்தலைவர்களும் உள்ளனர். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிருவாக கட்டமைப்பு **பிற்சேர்க்கை–I–ல்** வழங்கப்பட்டுள்ளது.

சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் மத்திய சிறைகள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சிறைகள், தனிக் கிளைச்சிறைகள், கிளைச்சிறைகள், திறந்தவெளிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) ஆகியவை இயங்கி வருகின்றன. பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் புழல், வேலூர் மற்றும் திருச்சியில் உள்ள பெண்கள் தனிச்சிறைகளும், பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச்சிறைகளும் இயங்கி வருகின்றன.

மாவட்ட சிறைகளில் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவற்றை சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிட உதவி புரிகின்றனர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர்/உதவி சிறை அலுவலர்/முதல் தலைமை சிறைக் காவலர்/முதல் நிலை சிறைக் காவலர்/இரண்டாம் நிலை சிறைக் காவலர்/தொழில்நுட்பப் பணியாளர்/ தொழில்நுட்பம் சாரா பணியாளர்/சீர்திருத்தப் பணியாளர்/ மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர்கள் உள்ளனர்.

சிறைத்துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 28.02.2023–ன் நிலவரப்படி 5491 ஆகும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 142 சிறைகள் உள்ளன. அவற்றுள் 9 மத்திய சிறைகள், 5 பெண்களுக்கான தனிச்சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், 96 ஆண்களுக்கான கிளைச்சிறைகள், 8 பெண்களுக்கான கிளைச்சிறைகள், 2 ஆண்களுக்கான தனிக் கிளைச்சிறைகள், 2 பெண்களுக்கான தனிக் கிளைச்சிறைகள், 3 பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் 3 திறந்த வெளிச்சிறைகள் ஆகியவை அடங்கும்.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின் சிறைவாசிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 24,342 ஆகும். சிறைவாரியான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி **பிற்சேர்க்கை–II**–ல் வழங்கப்பட்டுள்ளது.

## III. சிறை நிருவாக பிரிவுகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

### i) நன்னடத்தைப் பிரிவு

1946–ஆம் ஆண்டு முதல் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் "நன்னடத்தைப் பிரிவானது" தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும் மற்றும் 64 நன்னடத்தை அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சீர்திருத்தச் சட்டம், 1925 ஆகியவற்றை செயல்படுத்துதல், குற்றவியல் நீதித்துறை

நடுவர்களுக்கு உரிய விசாரணை அறிக்கைகள் அளித்தல், வயது வந்த குற்றவாளிகளை கண்காணித்தல், அவர்கள் மீண்டும் குற்றங்கள் இழைக்கா வண்ணம் தடுத்தல் ஆகிய பணிகளில் உதவுகின்றனர். நீதிமன்றத்திற்காக, குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்கள் வாழும் சூழல் குறித்து விசாரணை செய்வதோடு, நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர்.

மேலும், முதன்முறையாக குற்றம் புரியும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக, சில நிபந்தனைகளின் அடிப்படையில், நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான பணியாகும். சிறைவாசிகளை நேர்காணல் செய்து அவர்களது குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரம், வருவாய் ஈட்டுதல், கடன் வசதி மற்றும்

தண்டனை சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு பெறுதல் போன்றவற்றை நிறைவேற்றும் வகையில் நன்னடத்தை அலுவலர்கள், சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், காவல் நிலைய சிறைவைப்பு அறைகளில் விசாரணை சிறைவாசிகளுக்கு மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு அவற்றை பார்வையிடுமாறும் நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**ii) நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், காவல்துறை துணை கண்காணிப்பாளர் தலைமையில் காவல் துறையிலிருந்து மாற்றுப் பணியின் மூலம் பணியமர்த்தப்பட்ட 20 அலுவலர்கள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

துறையைச் சேர்ந்த 13 அலுவலர்களுடன் "நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு" செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறை பணியாளர்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்து, முக்கியமான மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரித்து, சிறை நிர்வாகம் திறன்பட செயல்பட உதவுவதோடு மட்டுமின்றி, நுண்ணறிவு தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றம் செய்யவும் உதவுகிறது.

iii) தொழில்நுட்பப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன கருவிகள் மற்றும் சாதனங்களை சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு, தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும், ஒரு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆகிய பணியாளர்களுடன் "தொழில்நுட்பப் பிரிவு" ஒன்று செயல்பட்டு வருகிறது.

### iv) மோட்டார் வாகனப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள அனைத்து வாகனங்களையும் பராமரிப்பதற்காக, ஒரு காப்பு காவல் ஆய்வாளர் (வகை.2) மேற்பார்வையில் "மோட்டார் வாகன பிரிவு" செயல்பட்டு வருகிறது.

### v) சட்ட ஆலோசனைப் பிரிவு

தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கிடவும், நீதிமன்ற வழக்குகளை கையாளுவதில் உதவிடவும், குற்ற வழக்கு தொடர்பு இயக்ககத்திலிருந்து, அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (தரம்–1) என்ற நிலையில் உள்ள ஒருவர், "சட்ட ஆலோசனைப் பிரிவில்" சட்ட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

## IV. மனித வள மேம்பாடு

### i) பணியாளர் தேர்வு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. தற்போது 153 ஆண் மற்றும் 8 பெண் சிறைக் காவலர்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. தேர்வு செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு திருச்சி, சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் ஆறு மாத கால அடிப்படை பயிற்சி அளிக்கப்படும்.

உதவி சிறை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் தகுதி உடைய முதல் தலைமை சிறைக் காவலர்கள் பதவி உயர்வு மூலமாகவும், 1 : 1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன.

தற்போது 55 ஆண் உதவி சிறை அலுவலர் மற்றும் 5 பெண் உதவி சிறை அலுவலர் பணியிடங்கள் குறித்த காலிப் பணியிட மதிப்பீட்டு விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு, தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சிறை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் பதவி உயர்வு மூலமாகவும், 1 : 2 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன.

சிறை அலுவலர் பணியிடங்களுக்கான காலிப் பணியிட மதிப்பீட்டு விவரங்கள் (6 ஆண் சிறை அலுவலர் மற்றும் 2 பெண் சிறை அலுவலர்) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு, தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நன்னடத்தை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்

தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் பதவி உயர்வு மூலமாகவும், 2 : 1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. தற்பொழுது, 2 நன்னடத்தை அலுவலர் பதவிக்கான காலிப்பணியிட விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மன இயல் நிபுணர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் நன்னடத்தை அலுவலர் பதவியிலிருந்து பணி மாற்றல் மூலமாகவும், 1 : 1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. தற்பொழுது, 4 மனஇயல் நிபுணர் பதவிக்கான காலிப்பணியிட விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**ii) பயிற்சி**

**அ) சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்**

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய ஐந்து தென் மாநிலங்களுக்கான சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூரில், 1979 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, சிறைத்துறை அலுவலர்களுக்கு சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து மாநிலங்களும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**ஆ) சிறைக்காவலர் பயிற்சி**

வேலூரில் அமைந்துள்ள சிறைக்காவலர் பயிற்சி பள்ளியில் புதிதாக நியமனம் செய்யப்படும் காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வேலூர் மத்தியசிறை கண்காணிப்பாளரே

சிறைக்காவலர் பயிற்சிப்பள்ளிக்கு முதல்வராகவும் உள்ளார். 130 சிறைக் காவலர்களுக்கு ஒரே நேரத்தில் பயிற்சி அளித்திட தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டுள்ளது.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அடிப்படை பயிற்சியும், அதில் உடற்பயிற்சி, ஆயுதபயிற்சி, சிறை மேலாண்மை விதிகள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றுடன் மனித உரிமைகள் பற்றிய சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இரண்டாம் நிலை சிறைக்காவலர், முதல் நிலை சிறைக் காவலர், முதல் தலைமை சிறைக் காவலர், உதவி சிறை அலுவலர் மற்றும் துணைச் சிறை அலுவலர் ஆகியோருக்கு வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை, மருதம் காவல்துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி வாயிலாக அதிரடிப்படைக்கான பயிற்சி,

கராத்தே, சிலம்பம் போன்ற தற்காப்பு கலைகள், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இ) பிற பயிற்சிகள்

புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்த தேசிய அளவிலான பயிற்சிகளில் இத்துறை அலுவலர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அதே போன்று பிற மாநிலங்களில் நடத்தப்படும் மாநில அளவிலான பல்வேறு வகையான பயிற்சிகளிலும் சிறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

## V. சிறை வகைப்பாடு

சிறைகள் மத்திய சிறைகள், தனிச்சிறைகள், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச்சிறைகள் மற்றும் கிளைச்சிறைகள் என 5 வகையாக உள்ளன.

சிங்காநல்லூர், சேலம், புரசடைஉடைப்பு ஆகிய இடங்களில் திறந்தவெளிச் சிறைகளும், புழல், வேலூர், திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் பெண்கள் தனிச்சிறைகளும் உள்ளன.

மத்திய சிறைகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படும் சிறைவாசிகள், தடுப்புக் காவல் மற்றும் நீதிமன்றகாவல்/விசாரணை சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு, அந்த வகைப்பாட்டின்படி சிறைவாசிகள் தனித்தனியே

பிரித்து வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டைச் சார்ந்த நீதிமன்ற காவல்/விசாரணை/தண்டனை சிறைவாசிகள் சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்படுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் அந்தந்த மாவட்ட சிறைகளில் வைக்கப்படுகின்றனர். மேலும், முக்கியமான வழக்குகளில் தொடர்புடைய விசாரணை சிறைவாசிகள் பூந்தமல்லி தனிக் கிளைச்சிறையிலும், சாதாரண குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் கிளைச்சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர்.

ஒரு மாதத்திற்கு மேல் சிறைத்தண்டனை / மரண தண்டனை விதிக்கப்பட்ட / வழக்கமாக குற்றம் புரியும் பெண் சிறைவாசிகள் மாநிலத்திலுள்ள ஐந்து பெண்களுக்கான தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சாதாரண குற்றங்கள் புரியும்

பெண் விசாரணை சிறைவாசிகள் பெண்கள் தனிக் கிளைச் சிறை மற்றும் கிளைச் சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர். பெண்களுக்கான சிறைகள், பெண் சிறைப்பணியாளர்களால் மட்டுமே நிருவகிக்கப்படுகின்றன.

திடமான உடல்நிலை மற்றும் மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சிவசப்படாத தன்மை மற்றும் விவசாய பின்னனி உடைய 21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட சிறைவாசிகள் அவர்களின் விருப்பத்தின் பேரில் திறந்த வெளிச்சிறைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர்.

## VI. சிறை பாதுகாப்பு

### i) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

அனைத்து மத்திய சிறைகளிலும் உயர் பாதுகாப்பு தொகுதிகள் அமைக்கப்பட்டு சிறைக் களப்பணியாளர்களால் கண்காணிக்கப்படுவதுடன், சிறைவாசிகளின் உரிமைக்கும் கண்ணியத்திற்கும் குறைவு ஏற்படாத வகையில் சிறைவாசிகளின்

பாதுகாப்பு மற்றும் அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவை, மத்திய சிறையின் வெளிப்புற பாதுகாப்பு மத்திய பாதுகாப்பு காவல் படையினராலும், கடலூர் மத்திய சிறை தவிர பிற மத்திய சிறைகளின் வெளிப்புற பாதுகாப்பு தமிழ்நாடு சிறப்பு காவல் படையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் உயர் பாதுகாப்பு தொகுதிகளில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் சோதனை செய்யப்படுகின்றனர். சிறைகளில் எவ்வித அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு நாசவேலை தடுப்பு

பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ii) செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்**

மாநிலத்திலுள்ள 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில், பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**iii) மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System)**

மத்திய சிறை–I, மத்திய சிறை–II, புழல் மற்றும் பெண்கள் தனிச்சிறை, புழல் ஆகியவற்றில் மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு **(Electronic Key Management System)** சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**iv) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் கருவிகள்**

9 மத்திய சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் பாதுகாப்புக் கருவிகள் நிறுவப்பட்டு, சிறைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**v) ஊடுகதிர் அலகிடல் கருவிகள் (X-Ray Baggage Scanners)**

அனைத்து மத்தியசிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

9 மத்திய சிறைகளில் பழைய ஊடுகதிர் அலகிடல் கருவிகளுக்கு மாற்றாக புதிய 9 ஊடுகதிர்

அலகிடல் கருவிகள் 2022–23–ம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

### vi) நடைப்பேசி **(Walkie Talkie)**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உபரி மின்கலத்துடன் கூடிய 380 புதிய நடைப்பேசி (Walkie Talkie) கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய சிறைகள்–I மற்றும் II, புழல், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சிறைகளில் 4 ரிப்பிட்டர் செட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன.

### vii) மறைகாணி கேமராக்கள் **(CCTV Cameras)**

சிறைவாசிகளின் நடவடிக்கைகளையும், பார்வையாளர்களையும் கண்காணிக்கும் வகையில் 556 மறைகாணி கேமராக்கள் (CCTV) அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட

சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சிறைவாசிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய மின்னணு அட்டைகள் 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**viii) காணொளி கலந்துரையாடல் வசதிகள்**

சிறைகளையும் நீதிமன்ற வளாகங்களையும் இணைப்பதன் மூலம் சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், காணொளி கலந்துரையாடல் மூலம் சிறைவாசிகளின் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்படுகிறது. இதனால் வழிக்காவலின்போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் வழிக்காவலுக்கும்,

போக்குவரத்திற்கும் ஏற்படும் செலவைக் குறைக்கவும், காணொலி கலந்துரையாடல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள், 403 நீதிமன்றங்களுடன் காணொலி கலந்துரையாடல் கருவிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் நீதிமன்ற காவல் நீட்டிப்பிற்காக 4,32,931 நிகழ்வுகளில் காணொலி கலந்துரையாடல் மூலம் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கையின் விவரம் பின்வருமாறு : –

| வ.எண். | ஆண்டு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2018 | 72,096 |
| 2. | 2019 | 65,924 |
| 3. | 2020 | 22,097 |
| 4. | 2021 | 94,081 |
| 5. | 2022 | 1,51,703 |
| 6. | பிப்ரவரி–2023 வரை | 27,030 |
| | **மொத்தம்** | **4,32,931** |

சிறைவாசிகளின் நீதிமன்ற காவல் நீட்டிப்பிற்காக காணொலி கலந்துரையாடல் மூலம் ஆஜர்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2022–ஆம் ஆண்டு 61 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**ix) மோப்ப நாய் பிரிவு**

சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் மோப்பநாய் பிரிவு செயல்பட்டு வருகிறது.

**x) புதிய கணினிகள் மற்றும் நகலெடுக்கும் இயந்திரங்கள்**

அனைத்து மத்திய சிறைகள், சிறைத்துறை துணைத் தலைவர், சென்னை, வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் பெண்கள் தனிச்சிறைகள், புழல், வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு 63 கணினிகள், 45 புள்ளி அச்சு

இயந்திரங்கள், 18 லேசர் பிரிண்டர்கள் மற்றும் 21 நகல் எடுக்கும் இயந்திரங்கள் ரூ.82.91 இலட்சம் செலவில் அரசு மின் சந்தை (GeM) வழியாக கொள்முதல் செய்யப்பட உள்ளன.

**xi)மின்னாக்கி (Generator)**

மாவட்ட சிறை, ஆத்தூர், செங்கல்பட்டு, கோபிச்செட்டிபாளையம் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு ரூ.60.00 இலட்சம் செலவில் 4 மின்னாக்கிகள் (100 கி.வா) கொள்முதல் செய்திட அனுமதியளிக்கப்பட்டு, அரசு மின் சந்தை (GeM) வழியாக கொள்முதல் செய்திட வழங்கலாணைகள் அளிக்கப்பட்டுள்ளது.

**xii) சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல் (Solar Power Generation)**

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் தமிழ்நாடு

எரிசக்தி மேம்பாட்டு முகமையால் (TEDA) நிறுவப்பட்டது. இதன் வாயிலாக 2018 முதல் 2022 வரையிலான காலங்களில் 1,60,761 யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டது. இதன் மூலமாக மின் கட்டண தொகை ரூ.13,50,392 சேமிக்கப்பட்டுள்ளது.

**xiii) ஆண்டு பராமரிப்பு நிதி**

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் சிறை கட்டிடங்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்புகளை முறையாக பராமரிக்க ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.500.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு செய்யப்பட்ட இத்தொகையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறை கட்டடங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## VII. சிறைகளின் அடிப்படை வசதிகள்

### i) மனித உரிமைகள்

சிறைவாசிகளின் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கு சிறைத்துறை நிர்வாகம் மிக உயர்ந்த

முன்னுரிமை அளித்து வருகிறது. சிறை அலுவலர்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் புத்தாக்கப் பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளிலும் சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான பாடத்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், சிறைவாசிகளின் மேம்பட்ட வாழ்க்கை தரத்தை உறுதிபடுத்தும் வண்ணம் அனைத்து சிறைகளிலும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையிலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகள் மற்றும் உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் பிற உயரதிகாரிகள் மாநிலத்தில் உள்ள சிறைகளுக்குச் சென்று சிறைவாசிகளின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகளை உறுதிசெய்து, தமிழக சிறை நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். மேலும், அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்களால்

காலமுறை ஆய்வு / தீடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ii) உணவு மற்றும் ஆடை**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983–ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி, சத்தான மற்றும் சமச்சீரான உணவு சுகாதாரமான முறையில் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. அசைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு உருளைக்கிழங்கு கறி, கேசரி, வாழைப்பழம் ஆகியவை வாரம் ஒருமுறை வழங்கப்படுகிறது.

நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் பால், ரொட்டி, முட்டை, கோழி இறைச்சி ஆகியன மருத்துவ உணவுகளாக வழங்கப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவினை தயாரிக்க வாரத்தில் திங்கள் முதல் சனி

வரை 6 நாட்கள் சூரியகாந்தி எண்ணையும், ஞாயிற்றுக்கிழமைகளில் நல்லெண்ணையும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

2022–ஆம் ஆண்டு முதல் சிறைவாசிகளின் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தொகை ரூ.50–லிருந்து ரூ.100–ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சமையலறையில் உணவு தயாரிக்கவும், உணவினை எடுத்துச் செல்லவும் துருப்பிடிக்காத இரும்பிலான பாத்திரங்களும், தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும் குவளைகளிலும் பரிமாறப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள், 1983–ல் வரையறுக்கப்பட்டவாறு, சிறைவாசிகளுக்கு ஆடைகளும், படுக்கைகளும் வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆண் தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால்

சட்டைகளும், அரைக்கை மேல் சட்டைகளும், பெரிய அளவிலான போர்வைகளும் வழங்கப்படுகின்றன. பெண் தண்டனை சிறைவாசிகளுக்கு சேலை மற்றும் ரவிக்கைகள் வழங்கப்படுகின்றன. விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான சொந்த உடைகளை அணிந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். போதிய உடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் போதுமான உடைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**iii) சுகாதாரம் மற்றும் உடல்நலன் பேணுதல்**

சிறைவாசிகளின் உடல்நலத்தினை கருத்திற் கொண்டு 24 மணி நேரமும் இடையூறு இல்லாமல் மருத்துவ சிகிச்சை அளிக்கும் பொருட்டு மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறை மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும்

தலா 3 உதவி மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறைவாசிகளுக்கு தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளை வழங்கிட, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் அனுபவமிக்க மருத்துவர்கள், அவர்களுக்கு உதவிட போதிய துணை மருத்துவ பணியாளர்களைக் கொண்ட சிறை மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தொடர் சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்தவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக அவசர சிகிச்சை ஊர்திகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்ட சிறைகள், பெண்கள் தனிக் கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு சிறைவாசிகளுக்கு தேவையான மேற்சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளை பெரும் நோய்களிலிருந்து தடுக்கும் பொருட்டு கண் சிகிச்சை முகாம், பல் மருத்துவ முகாம் மற்றும் பொதுப் பரிசோதனை போன்ற பல்வேறு மருத்துவ முகாம்கள் சிறைகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

21 வகையான உயிர் காக்கும் உபகரணங்கள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியத்தை பேணும் பொருட்டு சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை

கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ள அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். போதை பொருட்களுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையில் "மறுவாழ்வு மையங்கள்" அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறைவாசிகளிடையே தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்தி மூலம் முகச்சவரம் செய்யும் முறை கைவிடப்பட்டு, அதற்கு மாற்றாக, மறுபயன்பாடு இல்லாத சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம்

ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக அனைத்து மத்தியசிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் புழல் மற்றும் திருச்சியில் ரூ.1240.10 இலட்சம் செலவிலும், பூவிருந்தவல்லி, தனிக்கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவிலும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**iv) பெண் சிறைவாசிகளின் பராமரிப்பு**

பெண் சிறைவாசிகள் சிறையினுள் அனுமதிக்கப்படும்போதே, பெண் உதவி மருத்துவ அலுவலரால் முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன

கருவுற்ற பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள்

மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் தேவைக்கேற்ப உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பிரசவிக்க ஏதுவாக கருவுற்ற பெண் சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. மேலும், பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா தூய அணி ஆடைகள் (Sanitary Napkins) வழங்கப்படுகின்றன.

பெண் சிறைவாசிகளின் குழந்தைகளை பராமரிக்க எவரும் இல்லாத நிலையில், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கு, தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள், 1983–ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின்

பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

பெண் சிறைவாசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

**v) குடிநீர் சுத்திகரிப்பு (சவ்வூடு பரவல்) சாதனங்கள்**

சவ்வூடு பரவல் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனங்கள் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், அனைத்து மத்திய சிறை வளாகங்களில் உள்ள பணியாளர் குடியிருப்புகளிலும் ரூ.18.90 இலட்சம் செலவில் சவ்வூடு பரவல் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**vi) சிறைவாசிகள் தேநீர் விடுதி**

சிறைகளில் செயல்பட்டு வரும் "சிறைவாசிகள் தேநீர் விடுதி" மூலம் அனைத்து அத்தியாவசிய மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் சிறைவாசிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தை கருத்திற்கொண்டு, தற்போதுள்ள உச்சவரம்புத் தொகையானது வாரம் ஒன்றுக்கு "அ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.750–லிருந்து ரூ.1000 ஆகவும், "ஆ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.450–லிருந்து ரூ.750 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**vii) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

சிறைகளில் உள்ள கழிவுநீரை மறுசுழற்சி செய்து விவசாயத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

viii) கனரக சலவை இயந்திரங்கள்

சிறைவாசிகள் தாங்கள் பயன்படுத்தும் உடைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் ரூ.60.00 இலட்சம் செலவில் 15 கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

ix) மன நலன்

நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்படுவதன் காரணமாக சிறைவாசிகளுக்கு ஏற்படும் மன அழுத்தம் மற்றும் வன்முறை போக்கினை ஆற்றுப்படுத்தி சிகிச்சை அளித்திடும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில்

மனஇயல் நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் இவ்வகை மனநல ஆலோசனை அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது மட்டுமன்றி, மனநலப் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு சிறந்த எதிர்காலத்தை நோக்கி பயணிக்க உதவுகிறது.

மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள், சென்னை அரசு மனநல காப்பகத்தில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, உரிய மேல் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள மனநல நிபுணர்களைக் கொண்டு மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

உளவியல் சிக்கல்களுக்கு உள்ளாகும் சிறைவாசிகளின் மனநல மேம்பாட்டை உறுதி செய்யும் விதத்தில் அனைத்து மத்திய சிறைகளிலும் தலா

இரண்டு ஆற்றுப்படுத்துநர்கள் (Counsellors), பெண்கள் தனிச்சிறை, மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தலா ஒரு ஆற்றுப்படுத்துநரும் (Counsellor) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆற்றுப்படுத்துநர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதிய தொகையை ரூ.15,000–லிருந்து ரூ.25,000–ஆக அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

சிறைவாசிகள் தங்களுடைய குடும்பத்துடனான உறவினை தொடர்ந்து பராமரிக்கும் விதமாக நேர்காணல்களை ஏற்பாடு செய்தல், சிறைவாசிகளின் உரிமை கோரல்களை தீர்வு செய்தல், சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்கு பின்னர் கண்ணியமாக வாழும் பொருட்டு சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சிறைவாசிகளின் நலனை, விதிகளுக்குட்பட்டு

கவனித்திடும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும், புழல், வேலூர், பெண்கள் தனிச்சிறைகளிலும் நல அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது பெண் சிறைவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பெண்கள் தனிச்சிறை, திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகியவற்றில் 3 பெண் நல அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நல அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இடையில் ஒரு இணைப்பு பாலமாக செயல்படுகிறார்கள்.

**x) சிறைவாசிகளுடன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நேர்காணல்**

தமிழ்நாடு சிறை விதிகள், 1983ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல் செய்திட விண்ணப்பிக்க விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. மேலும்

இவ்விண்ணப்பப் படிவங்களை இத்துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். வெகு தூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இவ்வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாகவும் முன் அனுமதி பெறலாம். சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் அறையில் பேசும் பொழுது ஏற்படும் இரைச்சலை குறைத்திட நேர்காணல் அறையில் தொலைபேசி வழியாக உரையாடும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**xi) சிறப்பு நேர்காணல்**

வழக்குரைஞர்கள் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல்

1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிக்கு செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் வாழ்க்கைத்துணை ஆகியோர் ஓய்வு நாளில் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**xii) சிறைவாசிகளின் பயன்பாட்டிற்கான தொலைபேசி வசதி**

சிறைவாசிகளின் மன அழுத்தத்தை குறைத்திடும் பொருட்டு, சிறைவாசிகள் அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களை தொடர்பு கொள்ள தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, அனைத்து மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை, 9 மாவட்ட சிறைகள் மற்றும் 2 திறந்த வெளிச்சிறைகளில் மொத்தமாக 65 தொலைபேசி

மையங்கள் ரூ.300.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டு உள்ள இத்தொலைபேசி வசதி, ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு 4 ஞாயிற்றுக்கிழமைகள் உட்பட 8 முறையாகவும், பேசும் நேரம் 56 நிமிடங்கள் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.12.2022 வரையில், இந்த வசதியை சிறைவாசிகள் 16,86,826 முறை பயன்படுத்தியுள்ளனர்.

**xiii) பார்வையாளர் மேலாண்மை திட்டம்**

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும், எளிய வழிமுறைகளை

கொண்ட பார்வையாளர் மேலாண்மைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### xiv) ஆதார் பதிவு

சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகளிடம் ஆதார் ஆவணங்கள் இல்லாத காரணத்தால், ஆதார் அட்டை வழங்கும் வகையில், சிறைகளில் ஆதார் பதிவு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்கு பின்னர் கண்ணியமாக வாழவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவையான வேலைவாய்ப்பு/நிதி கடன்களுக்கு விண்ணப்பிக்க இது உதவும்.

### xv) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச சட்ட உதவி வசதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு மூலமாக தனியாக இலவச

சட்ட உதவி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலம் சிறைவாசிகள் வழக்கு தொடர்பான அனைத்து சட்ட உதவிகளையும் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

சிறைவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவும், பிணை கோரவும், வழக்கு விசாரணையினை நடத்தவும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களை இந்த இலவச சட்ட மையங்கள் மூலமாக அணுகலாம். சிறைவாசிகளின் வழக்கு தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்யவும், தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முன்னேற்ற நிலையினை கண்காணிக்கவும், சிறைவாசிகளுக்கு இந்த இலவச சட்ட உதவி மையங்கள் உதவுகின்றன. இதன் மூலம் சிறைவாசிகள் தங்கள் வழக்குகளில் விரைவாக நீதியினை பெற இயலும்.

**xvi) சிறை நீதிமன்றங்கள்**

சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக்

குறைக்கவும் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதித்துறை நடுவர்கள் இந்த சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளை தீர்வு செய்கின்றனர்.

சிறை நீதிமன்றங்களின் மூலமாக 01.01.2021 முதல் 31.12.2022 வரை 1478 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

## VIII. சிறைவாசிகளின் சீர்திருத்தம்

### i) சிறையில் கல்வி வசதி

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகளிடையே 100 சதவீத கல்வி அறிவினை கற்பிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும், ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகமும் ஒருங்கிணைந்து பல திட்டங்களை தொடங்கி செயல்படுத்தி வருகின்றன. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி

பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

சிறைவாசிகள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக் கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு (v) வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என தேவைக்கேற்ப கல்வித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறையில் வகுப்புகள் நடத்துவதற்கு கல்வித் தகுதி பெற்ற சிறைவாசிகளும் பயன்படுத்தப்படுகின்றனர்.

அனைத்து சிறைகளிலும் உள்ள எழுதப்படிக்க தெரியாத சிறைவாசிகளுக்கு மாநில பள்ளிக்கல்வித் துறையின் சிறப்பு கல்வியறிவு பணி / திட்டத்தின் மூலமாக அடிப்படை கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக சிறைவாசிகள் அடையாளம் காணப்பட்டு சிறை ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வி துறையினரால் புழல் மத்திய சிறை–1–ல் பயிற்சி வழங்கப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு செலவில் சிறைவாசிகளுக்கு அஞ்சல்வழிக் கல்வி வசதியும் வழங்கப்படுகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023ம் ஆண்டில் 109 சிறைவாசிகள் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வும், 163 சிறைவாசிகள் 11-ம் வகுப்பு பொதுத் தேர்வும், 231 சிறைவாசிகள்

10–ம் வகுப்பு பொதுத் தேர்வும், 386 சிறைவாசிகள் 8–ம் வகுப்பு தேர்வும் எழுதுகின்றனர்.

2022–2023ம் ஆண்டில் மொத்தம் 9,844 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு பாடப்பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வருகின்றனர்:–

| பாடப்பிரிவு | சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம் | 1,802 |
| அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 3,606 |
| எழுத்தறிவு திட்டக்கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 3,049 |
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 04 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 28 |
| கலை / அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 26 |
| கலை / அறிவியல் / வணிகவியல் / இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு | 96 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 31 |
| 8 (386) , 10 (231) , 11 (163) மற்றும் 12 ஆம் வகுப்பு (109) | 889 |
| பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பு | 313 |
| **மொத்தம்** | **9,844** |

திருச்சி, மத்திய சிறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2022–2023ம் ஆண்டில் 176 சிறைவாசிகள் பல்வேறு வகையான கீழ்க்காணும் தொழிற்கல்விகளை பயின்று வருகின்றனர்:–

| வ. எண் | தொழிற் பயிற்சியின் பெயர் | காலம் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | பொருத்துநர் | இரண்டு ஆண்டுகள் | 20 | 4 | 24 |
| 2 | மின்வினைஞர் | இரண்டு ஆண்டுகள் | 20 | 4 | 24 |
| 3 | கணினி இயக்குநர் மற்றும் மென்பொருள் உதவியாளர் | ஓராண்டு | 48 | – | 48 |
| 4 | வெட்டுதல் மற்றும் தைத்தல் | ஓராண்டு | 40 | – | 40 |
| 5 | பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்) | ஓராண்டு | 40 | – | 40 |
| | | **மொத்தம்** | **168** | **8** | **176** |

## ii) இலவசக் கல்வி

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் மூலம் இளங்கலை, முதுகலை, பட்டயப்படிப்பு மற்றும் தொழில் நுட்ப படிப்புகளை இலவசமாக பயின்றிட நிருவாக ஆணை அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டவாறு 113 சிறைவாசிகள் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் மூலம் பட்ட படிப்புகளை இலவசமாக பயின்று வருகின்றனர்:–

| வ.எண் | சிறையின் பெயர் | சேர்க்கை விவரம் |
|---|---|---|
| 1. | மத்திய சிறை–1, புழல் | 18 |
| 2. | மத்திய சிறை–2, புழல் | 01 |
| 3. | மத்திய சிறை, கடலூர் | 17 |
| 4. | மத்திய சிறை, வேலூர் | 01 |
| 5. | மத்திய சிறை, திருச்சி | 11 |
| 6. | மத்திய சிறை, மதுரை | 26 |
| 7. | மத்திய சிறை, கோவை | 14 |
| 8. | மத்திய சிறை, சேலம் | 07 |
| 9. | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 17 |
| 10. | பெண்கள் தனிச்சிறை, புழல் | 01 |
| | **மொத்தம்** | **113** |

### iii) சிறை நூலகம்

சிறைகளில் உள்ள சிறைவாசிகள் புத்தகங்கள், செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களைப் படித்து பயன் பெறும் வகையில் ஒவ்வொரு மத்திய சிறைகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை நூலகங்கள் வாசிப்பின் மூலம் சிறைவாசிகளுக்கு கல்வி அளிப்பதிலும், அவர்களை பண்பட்டவர்களாக மாற்றுவதிலும், நல்ல சிந்தனைகள் மற்றும் உயரிய விழுமியங்கள் விதைப்பதிலும், குடும்ப உறவுகளை மேம்படுத்தி மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகளை கல்வி மூலம் சீர்திருத்தும் பொருட்டு, சிறை நூலகங்களின் உள்கட்டமைப்பு மற்றும் சூழலை மேம்படுத்துவதன் மூலம் சிறைவாசிகளின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது. இந்த நோக்கத்தை அடையும் வகையில், புத்தகங்களை அதிக அளவில் சேகரிக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட புத்தகக்

கண்காட்சிகளில் சிறைத்துறை முதன் முறையாக பங்கேற்று பல்வேறு தரப்பிலிருந்து சுமார் எழுபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை நன்கொடையாக பெற்றுள்ளது.

### iv) சிறை தொழில்கள் மற்றும் திறன் மேம்பாடுகள்

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்பு பெற அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ள ஏதுவாக, அவர்களுக்கு கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செயல்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு புதுமையான சீர்திருத்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையிலும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் திறன் மற்றும் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தண்டனை காலத்தில் சிறைவாசிகள்

உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத்திறன்களைக் கற்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவு தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்ப்பான்கள் உற்பத்தி, குளியல் / சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பூச்சு தொழிற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், உலர் சாம்பல் கற்கள் உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்கூடங்கள் சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் விவசாய உற்பத்தி, இயற்கை உர உற்பத்தி மற்றும் தோட்டக்கலை மேம்பாடு போன்ற பயிற்சிகளும் சிறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான, சீருடைத் துணி, வார்ப்பட்டை (belt), தொப்பிகள், சீருடைக் காலணிகள், காலணி பூச்சு, மழை மேலங்கி (raincoats), கொசு வலைகள் ஆகியன காவல்,

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளுக்கும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பாண்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்து பெட்டகங்கள் (Bed-side Lockers) போன்றவை பல்வேறு அரசுத் துறைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

'சேவைத் துறை' என்கிற வகையில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, பல்வேறு அரசுத் துறைகளுக்கு இப்பொருட்களை வழங்குவதில் சிறப்புரிமை பெற்று வழங்கி வருகிறது.

2022-2023-ம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 44.30 கோடி ஆகும்.

**v) சிறை அங்காடிகள்**

மத்திய சிறைகள், சில மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் ஆகியவற்றில் சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திடவும், **"சிறை அங்காடிகள்"** அரசால் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை (Wallet) தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு, சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்திகள், கொசுவலைகள், மழைமேலங்கி (raincoats), காலணி பூச்சு, ஆயத்த ஆடைகள், தேன், மசாலா தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள்,

இயற்கை உரமிட்ட காய்கறிகள், செக்கு எண்ணெய் (Cold Pressed Edible Oil), மண்புழு உரம், பஞ்சகவ்யம், கரிம பூச்சிக்கொல்லிகள், ஓவியங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் "ஃப்ரீடம்" (Freedom) என்ற பதிவு செய்யப்பட்ட அடையாள பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் அழகு நிலையங்கள், சலவைப்பெட்டியிடுதல், உணவகம் போன்ற இதர சில்லரை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

சிறை அங்காடிகளில் கிடைக்கப் பெறும் இலாபத் தொகை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது:–

அ) 20% சிறைவாசிகளின் ஊதியம்

ஆ) 20% அரசு கணக்கு

இ) 20% சிறைப் பணியாளர்களின் நல நிதிக் கணக்கு

ஈ) 40% தமிழ்நாடு சிறைத்துறை பொருட்கள் உற்பத்தி கணக்கு

இந்த அங்காடிகளில் 2022–2023-ம் ஆண்டு (பிப்ரவரி 2023 வரை) **ரூ.523.08 இலட்சம்** மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு, **ரூ.100.76 இலட்சம்** நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

**vi) சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம்**

சிறை தொழிற்கூடப்பணிகளில் தண்டனை பெற்ற சிறைவாசிகள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயல்திறன் பெற்றோர், பகுதி செயல்திறன் பெற்றோர், செயல்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு ஒரு சிறைவாசிக்கு நாளொன்றுக்கு முறையே ரூ.200, ரூ.180 மற்றும் ரூ.160 ஊதியமாக வழங்கப்படுகிறது. மேலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய நிர்ணயக் குழு மூலம் ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது.

**vii) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை**

சிறைவாசிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதில் சிறை நிர்வாகம் அதிக முன்னுரிமை அளிக்கிறது. காவல் துறை இயக்குநர்/சிறைகள்

மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் மற்றும் சரக சிறைத்துறை துணைத்தலைவர்கள் தங்களது வாலாய பார்வையிடல்/வருடாந்திர ஆய்வுகளின் போது சிறைவாசிகளின் குறைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். சிறைக் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வாரமும் சிறைவாசிகளின் ஆய்வு அணிவகுப்பின் போது அவர்களது குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்து வருகின்றனர்.

சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணிநாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதைத் தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளிடம் குறை கேட்டல் மற்றும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் உள்ளிட்ட இதர வசதிகளை ஆய்வு செய்கின்றனர்.

**viii) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு**

வேலைவாய்ப்பு கோரும் விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன்தொடர்புடைய தொழிற்சாலைகள் போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

**ix) பட்டம் (PATTAM) என்கிற சிறைவாசிகளுக்கான சீர்திருத்த திட்டம்**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சிறைவாசிகளுக்காக பல்வேறு சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு திட்டங்களை

செயல்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு தொலை நோக்கு திட்டம் தான் 'பட்டம்' (PATTAM) இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். இத்திட்டம் காவல், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க, முதன் முறையாக சிறு குற்றங்களில் ஈடுபடும் இளம் வயது (18–24 வயது) விசாரணை சிறைவாசிகளுக்கென குறிப்பாக வடிவமைக்கப்பட்ட சீர்திருத்த திட்டமாகும். இத்திட்டம், விசாரணை சிறைவாசிகளை மீண்டும் சமுதாயத்துடன் ஒருங்கிணைத்து, சமூகத்தில் பொறுப்பான நபராக மாற்றும் வகையில், ஒரு முழுமையான சீர்திருத்தத்தை அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

இத்திட்டம் முதலில் சைதாப்பேட்டை கிளைச்சிறையில் துவங்கப்பட்டு 02.10.2021

முதல் மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி 5104 விசாரணை சிறைவாசிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

| வ. எண். | சிறைகளின் பெயர் | அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2022 வரை | |
|---|---|---|---|
| | | பங்கேற்றவர்கள் | மீண்டும் கைதானவர்கள் |
| 1 | கிளைச்சிறை, சைதாப்பேட்டை | 971 | 0 |
| 2 | அனைத்து மத்திய சிறைகள் ( மத்திய சிறை –1 புழல் நீங்கலாக) | 4133 | 12 |
| **மொத்தம்** | | **5104** | **12** |

**x) தண்டனைக்குறைப்பு / முன் விடுதலை**

தண்டனைக்குறைப்பு என்பது, சிறைவாசிகளின் நடத்தையை சீர்செய்து, அவர்களது பழக்க

வழக்கங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் முக்கியமான ஒன்றாகும்.

15.09.2021 அன்று டாக்டர். பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் 113வது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.09.2021 அன்று சட்டமன்ற பேரவையில் ஆயுள்தண்டனை சிறைவாசிகளின் தண்டனையை, நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்ய அறிவித்ததன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.488, உள் (சிறை–4) துறை, நாள்.15.11.2021 மூலம் 15.09.2021 அன்றுள்ளபடி 10/20 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசுக்கு பரிந்துரைக்கப்படும் ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கருத்துருக்கள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டு, அரசு ஆணையின்படி,

இதுவரை 318 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்தியாவின் 75–வது சுதந்திர தினத்தின் ஒரு பகுதியாக, 15.08.2022 அன்று 20 தண்டனை சிறைவாசிகளும், 26.01.2023 அன்று 60 தண்டனை சிறைவாசிகளும் சிறப்பு தண்டனை குறைப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

## IX. மனமகிழ் நிகழ்வுகள்

### i) வானொலி பெட்டி

சிறைவாசிகளின் தனிமையை போக்குவதற்கும், அவர்களின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைப்பதற்கும், சிறைகளில் இசை மற்றும் இதர நிகழ்ச்சிகள் பண்பலை வானொலி பெட்டிகள் மற்றும் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், தனிநபர் வளர்ச்சி, இலக்கு நிர்ணயம் மற்றும் துன்பங்களை சமாளித்தல் போன்ற தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரைகள் ஆடியோ புத்தகங்கள் மூலம்

சிறைவாசிகளுக்கு ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், போதை பழக்கத்திலிருந்து விடுபடவும், கோபத்தினை குறைத்திடவும் மற்றும் மனநலம் தொடர்பான தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரைகள் வடிவமைக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன.

**ii) இசை / தொலைக்காட்சி பெட்டி**

சிறைவாசிகள் தங்கள் கோபம் மற்றும் மனஅழுத்தத்தை பாதிப்பில்லாத வகையில் மனம் மாற்றம் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் மற்றுமொரு கருவியாக இசை விளங்குகிறது. சிறைகளில் ஒலிபரப்பப்படும் இசை, சிறைகளில் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் தன்னம்பிக்கை மற்றும் தன்மதிப்பை அதிகரிக்கப்பதுடன் நேர்மறையான கற்றல் அனுபவங்களை உருவாக்கவும் உதவுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் இசை குழுக்கள் செயல்படுவதுடன் சிறைவாசிகள் இசைக்கருவிகளை வாசிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மேலும், சிறைவாசிகளின்

பொழுதுபோக்கிற்காக போதுமான தொலைக்காட்சி பெட்டிகள் சிறைகளில் பொருத்தப்பட்டுள்ளன. திறந்தவெளி அரங்கத்தில் நல்லொழுக்கம் மற்றும் நீதிக்கருத்துகளை கற்பிக்கும் வகையிலான திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

iii) விளையாட்டு போட்டிகள்

சிறைவாசிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி அவர்களை சீர்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு சிறந்த கருவியாக திகழ்கிறது. விளையாடுவதன் மூலம் ஒருவரின் மனக்கட்டுப்பாடு, சுயமரியாதை, சூழலை எதிர்கொள்ளும் திறன் ஆகியவை மேம்படுகிறது. மேலும், இதன் வழியாக சிறைவாசிகள் தங்கள் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் மன உளைச்சல்களிலிருந்து ஆரோக்கியமான முறையில் விடுபட முடியும். அதுமட்டுமின்றி, உடற்பயிற்சி தசை இறுக்கத்தை குறைத்து ஆரோக்கியமான உடல் நிலையைத் தருகிறது. இந்த காரணிகள் ஒவ்வொன்றும்

ஒரு சிறைவாசியின் மறுவாழ்வு செயல்முறைக்கு முக்கியமானவைகளாகும். சிறைவாசிகள் மாலையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் விரும்பும் சதுரங்கம், கேரம், டெனிகாய்ட் போன்ற உட்புற விளையாட்டுகளை விளையாட ஊக்குவிக்கப்படுகிறார்கள். அனைத்து சிறைகளிலும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கைபந்தாட்ட மைதானம் மற்றும் ஒரு இறகு பந்து மைதானம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.15.4 இலட்சத்துக்கு விளையாட்டுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**iv) கலை நிகழ்ச்சிகள்**

சிறைவாசிகளின் சீர்திருத்தத்தில் கலை நிகழ்ச்சி, இசை மற்றும் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது. நாடகம், நாட்டுப்புற நடனம், வினாடி-வினா போட்டி, பட்டிமன்றம், பாட்டு, சொற்பொழிவு, கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் சிறைகளில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. காந்தியடிகள் பிறந்த தினம்

சிறைவாசிகளின் நலநாளாக கொண்டாடப்படுவதால், இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் பிற நாட்களிலும் சிறையில் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றனர். இவை மட்டுமின்றி சிறைவாசிகள் நலனில் அக்கறை கொண்ட தனிநபர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சிறைவாசிகளின் மறுவாழ்வு பயிற்சி திட்டங்கள் மற்றும் சமய சொற்பொழிவுகள் நடத்துவதற்கு உரிய சரிபார்த்தலுக்குப்பின் அனுமதி வழங்கப்படுகிறது.

## X. பணியாளர் நலன்

ஊழியர்களின் நல்வாழ்வுக்காகவும் அவர்களின் மன உறுதியை அதிகரிக்கவும், அசாதாரண சூழலில் பணியாற்ற அவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு படிகள்/ வசதிகள் வழங்கப்படுகின்றன.

i) **உணவுக் கட்டணம்**

மத்திய சிறைகள் மற்றும் மாவட்ட சிறைகளில் அவசர கால பணிகள், கூட்டான கைது நடவடிக்கைகள், சிறை வளாகங்களில் சோதனை செய்தல் போன்ற நேர்வுகளில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் சிறைக் களப்பணியாளர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. சென்னை நகரில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.300 வீதம் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கும், இதர மாவட்டங்களில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.250 வீதம் ஒரு மாதத்தில் 6 நாட்களுக்கும், இரண்டாம் நிலை சிறைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான சிறைப் பணியாளர்களுக்கு உணவுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

ii) இடர்படி

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப்பணியாளர்களுக்கு மாதம் ரூ.800–ம், சிறை அலுவலர் முதல் சிறைக்கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள அலுவலர்களுக்கு மாதம் ரூ.900–ம், இடர்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

iii) தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி

இரண்டாம் நிலை சிறைக்காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறைப்பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஆண்டுதோறும் தலா ரூ.1000 மற்றும் சலவைப்படியாக மாதம் தோறும் ரூ.500 வழங்கப்படுகிறது.

iv) இரவு உணவுப்படி

இரவு உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூ.100 இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி,

முதல் தலைமை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**v) மிகை நேரப் பணி ஊதியம்**

மிகை நேரப் பணி ஊதியமாக ரூ.200 வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும், முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

**vi) பதக்கங்கள்**

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும், சிறந்த பணிச்சான்று கொண்டிருக்கும் சீருடை பணியாளர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:–

**அ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணி பதக்கம் – பொங்கல் பதக்கம்**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை

சிறைக் காவலர்களுக்கு, அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கமும், பதக்கப் படியாக மாதந்தோறும் ரூ.400–ம் வழங்கப்படுகிறது.

**ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை சேவைக்கான பதக்கம் –அண்ணா பதக்கம்**

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பத்து சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி இப்பதக்கம் வழங்கப்படுகிறது, பதக்கம் வெல்லும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு தொகை அரசால் வழங்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | சிறை அலுவலர் முதல் சிறைக்கண்காணிப்பாளர் நிலை வரை | ரூ.15,000 |
| 2. | உதவி சிறை அலுவலர் மற்றும் துணைசிறை அலுவலர் நிலை | ரூ.10,000 |
| 3. | இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி முதல் தலைமை சிறைக் காவலர் நிலை வரை | ரூ. 5,000 |

### இ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு எந்தப் பதவியிலிருந்தாலும், ரொக்கப்பரிசு ரூ.5.00 இலட்சம் அரசால் வழங்கப்படுகிறது.

### ஈ) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறை பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது.

### vii) தமிழ்நாடு சிறை சேம நல நிதிக்கு வழங்கப்படும் மானியத்தொகை

தமிழ்நாடு சிறை சேம நலநிதி உருவாக்கப்பட்டு, அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் நிதி உதவி

வழங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் இணை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது.

இந்நிதியிலிருந்து இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு கல்லூரிக் கல்வி, நெடுநாட்பட்ட கடுமையான நோய்கள், விபத்து காயங்கள் போன்றவற்றிற்கான மருத்துவ சிகிச்சை ஆகிய இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், பணியாளர்களோ அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும் இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

viii) குழுக் காப்பீட்டுத் திட்டம்

குழுக் காப்பீட்டுத் திட்டம் சிறைத்துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள களப்பணியாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணியில் இருக்கும்போது இயற்கையாக மற்றும் விபத்தின் காரணமாக இறக்க நேரிடும்

பணியாளர்களுக்கு ரூ.2.00 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

**ix) கருணைத் தொகை வழங்குதல்**

பணியில் இருக்கும் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் சிறைப் பணியாளர்களுக்கு அவர்களது சேவையை அங்கீகரிக்கும் வகையில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் இறுதியாக பெற்ற ஊதியம், அப்பணியாளர் உயிரோடு இருந்தால் அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் ஏதுவோ, அது வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதன் பின் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணை தொகை ரூ.2.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும், கருணைத் தொகை வழங்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர ஊனம் | ரூ. 50,000 |
| 2. | படுகாயம் | ரூ. 10,000 |
| 3. | சாதாரண காயம் | ரூ. 5,000 |

**x) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை**

சிறைப்பணியாளர்களின் குறைகளை களையும் பொருட்டு கீழ்க்கண்ட அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடத்தப்பட்டு வருகின்றன:–

| | | |
|---|---|---|
| 1. | காவல்துறை இயக்குநர் /சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் | காலாண்டிற்கு ஒருமுறை |
| 2. | சரக சிறைத்துறைத் துணை தலைவர் | மாதம் ஒருமுறை |
| 3. | சிறை கண்காணிப்பாளர்கள் | வாரம் ஒருமுறை |

குறை தீர்ப்பு கூட்டங்களின் போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதைத் தவிர, காவல்துறை தலைமை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர், தலைமை அலுவலகத்திலும் சிறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் போதும், சிறைகளைப் பார்வையிடும் போதும் பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு விண்ணப்பங்களைப் பெற்று, விரைந்து தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்கிறார்.

**xi) காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்**

காவல்துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் சலுகை,

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும்/ஓய்வு பெற்ற/காலஞ்சென்ற சீருடை/அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**xii) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள்**

நியாய விலைக் கடைகளின் மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவை இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**xiii) சிறை களப்பணியாளர்களுக்கு மழைமேலங்கிகள் (raincoats) மற்றும் கொசுவலைகள் வழங்குதல்.**

சிறை களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள்,

கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் பணிபுரிபவர்களுக்கு 3 வருடத்திற்கு ஒரு முறை மழைமேலங்கிகளும், கொசுவலைகளும் வழங்கப்படுகின்றன.

**xiv) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்**

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைத்துறை துணைத் தலைவர் வரையிலான சிறை களப்பணியாளர்ளுக்கு அரசால் குடியிருப்புகள் கட்டி தரப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் தேவைகளின் அடிப்படையில் புதிய பணியாளர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் மூலம் அரசால் கட்டடப்பட்டு வருகின்றன.

## XI. புதிய செயல்பாடுகள்

### i) சீர்திருத்த சிறகுகள்

தமிழகம் முழுவதும் உள்ள சிறைகளில் பல சீர்திருத்த திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் கல்வி, திறன் பயிற்சி,

தொழில்துறை பயிற்சி, யோகா, தியானம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இருப்பினும், இந்தத் திட்டங்களில் பெரும்பாலானவை, மொத்தம் அனுமதிக்கப்பட்ட சிறைவாசிகளில் 30 விழுக்காட்டை கொண்ட தண்டனை சிறைவாசிகளுக்காகவே அமைந்துள்ளது. எனவே, மீதமுள்ள 70 விழுக்காடுள்ள விசாரணைக் சிறைவாசிகள் மற்றும் அனைத்து வகையான பிற சிறைவாசிகளுக்கும் சீர்திருத்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது அவசியமானது. எனவே, சிறைகளை ஒரு முழுமையான சீர்திருத்த மையங்களாக மாற்றும் அணுகுமுறையுடன் "சீர்திருத்த சிறகுகள்" என்ற திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

மது மற்றும் போதைப் பழக்கம், குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான உந்து சக்தியாக இருப்பது அனைவரும் அறிந்ததே. எனவே, போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 9 மத்திய சிறைகளிலும், 5 பெண்கள் தனிச் சிறைகளிலும்

பிரத்யேக போதை மறுவாழ்வு மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2023–2024–ம் நிதியாண்டில் போதை ஒழிப்பு மையங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தொழிற்கல்வி ஆலோசகர் மற்றும் மனநல மருத்துவர்/சிகிச்சையாளர் ஆகியோருக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கும், மறுவாழ்வு மையத்திற்கு தேவையான மருந்துகளை வாங்குவதற்கும் ரூ.93,72,000/– (தொடர் செலவினமாக) செலவழிக்க அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ii) சமூக இயல் வல்லுநர்**

**மத்திய சிறை, வேலூர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று சிறைகளில் சமூக இயல் வல்லுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சமூக இயல் வல்லுநர் பதவியில் பணிபுரியும் பணியாளர்கள் சீர்திருத்த அலுவலர்கள் என அழைக்கப்படுகின்றனர். புதிதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளை சிறை சூழலுக்கு ஏற்ப தயார்படுத்தும் வரவேற்புக் குழுவில் சீர்திருத்த**

அலுவலர்களாக பணிபுரியும் இவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தண்டனை பெற்ற சிறைவாசிகளின் சமூகப் பின்னனி குறித்து ஆராயவும், தகுந்த முறையில் தனிநபர் ஆற்றுபடுத்துதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடவும், சிறைவாசிகளுடைய குடும்ப உறுப்பினர்களுடனான தொடர்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நீங்கலாக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் ரூ.15,000 மதிப்பூதியத்தில் 12 சமூக இயல் வல்லுநர்கள் நியமிக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில், 12 சமூக இயல் வல்லுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

**iii) உடல் அணிந்த கேமரா (Body Worn Camers) மற்றும் சேவையகம் (Server) தலைமை அலுவலகத்தில் அமைத்தல்**

9 மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 50 உடல்

அணிந்த கேமராக்களும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தத் பணிகள் துறையின் தலைமை அலுவலகத்தில் அது தொடர்பான சேவையகம் (Server) ஒன்றும் ரூ.49,98,055/– செலவில் நிறுவப்பட்டுள்ளது.

சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்தின் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கு உடல் அணிந்த கேமரா ஒரு சிறந்த சாதனமாகும். உடல் அணிந்த கேமராவை அணிவது களப்பணியாளர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்கும். சிறைவாசிகள் தங்களது நடமாட்டம்/செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதை அறிவதால், சிறைவாசிகள் தேவையில்லாமல் ஒரு சிறைத் தொகுதி விட்டு வேறொரு சிறைத் தொகுதிக்கு செல்வது கட்டுப்படுத்தப்படும். உடல் அணிந்திருக்கும் கேமராக்கள் மூலம் சிறைகளில் நடக்கும் அசம்பாவித சம்பவங்களை வீடியோ மற்றும் ஆடியோ மூலம் பதிவு

செய்ய முடியும். மறைகாணி கேமராக்களின் பதிவுகளை விட உடல் அணிந்த கேமராக்களின் பதிவுகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதோடு, சிறைவாசிகளின் ஆக்ரோஷம் மற்றும் வன்முறையைத் தவிர்க்கவும், நடத்தையை மேம்படுத்தவும் உதவுகின்றன. இக்கருவி அலுவலர்கள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவதோடு, சிறைகளில் எல்லா சூழ்நிலைகளிலும், என்ன நடக்கிறது என்பதை அறிவதின் மூலம் சிறை நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மேம்படுத்துகிறது.

**iv) சிறைத்துறைத் தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் காணொளிச்சுவர் வசதி (Video Wall) ஏற்படுத்துதல்**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் காணொளிச்சுவர் வசதியை அமைப்பதற்காக ரூ.49,99,999/- நிதி வழங்கப்பட்டது.

இக்காணொளிச்சுவர் நாள்முழுவதும் இயங்கும் ஒரு பெரிய திரையுடன் கூடிய சிறந்த அமைப்பாகும். இது பல கணினி இணைப்புகளை ஒருங்கிணைத்து திரையில் ஒளிபரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

9 மத்திய சிறைகளில் இருந்து மறைகாணிகளின் வாயிலாக பெறப்படும் தரவுகளை கண்காணிப்பதற்காக, சிறைத்துறை தலைமையக கட்டுப்பாட்டு அறையில் 3 (நேர்வரிசை) x 3 (நெடுவரிசை) கொண்ட அணிவரிசை காணொளிச்சுவர் நிறுவப்பட்டுள்ளது. தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பின் மூலம், மத்திய சிறைகளில் நடக்கும் நிகழ்வுகளை அதிகாரிகள் உடனுக்குடன் கண்காணித்து விரைவான தீர்வினை எட்ட முடியும். ஒரே ஒரு ஒளிச்சுவரை கொண்டு பல பயன்பாடுகளை இயக்க முடியும். இச்சாதனத்தினால், சிறைகளில் எல்லா சூழ்நிலைகளிலும் என்ன நடக்கிறது என்பதை அறிவதன் மூலம் சிறை நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மேம்படுகிறது.

**v) அடையாள அணிவகுப்பு அறை கட்டுதல்**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் மூலம் ரூ. 472.81 இலட்சம் செலவில் அடையாள அணிவகுப்பு அறைகள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் 13 மாவட்டச்சிறைகளிலும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**vi) சிறைவாசிகளின் உணவு முறையை மாற்றுவதற்கான குழு**

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் அளவு மற்றும் முறையினை மாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்வதற்கு, உள்துறை மற்றும் நிதித்துறை அரசு துணைச் செயலாளர்கள், சிறை அலுவலர்கள் மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் ஊட்டச்சத்து நிபுணர் கொண்ட குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்படும் உணவு முறையினை ஒப்பீடு செய்து

காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநருக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

**vii) பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் வழங்குதல் (Drones with Colour Cameras)**

9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படகருவிகள் ரூ.21.85 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**viii) மத்திய சிறை வளாகங்களில் பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைத்தல்**

முதற்கட்டமாக மத்திய சிறைகள் புழல்–1, வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறை வளாகங்களில் திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து "முன்னோடி திட்டமாக" (Pilot Project) பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் சிறைவாசிகளின்

சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கு ஏற்ற வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து பெட்ரோல் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் 2018–2019 முதல் 2022–2023–ம் ஆண்டு நவம்பர் 2022 வரை **ரூ.751.71 கோடி** விற்பனை செய்யப்பட்டு **ரூ.21.56 கோடி நிகர லாபம்** பெறப்பட்டது.

தற்போது, இரண்டாம் கட்டமாக மத்திய சிறை–1, புழல் – அம்பத்தூர் சாலை, திருச்சி – விமான நிலைய சாலை, கோயம்புத்தூர் – பாரதியார் சாலை, சேலம் மற்றும் மதுரை மற்றும் பெண்கள் தனிச்சிறை, திருச்சி – காந்தி சந்தை ஆகிய 6 இடங்களில் துவங்கிட அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## XII. முடிவுரை

சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சிறை உட்கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, அரசிடமிருந்து பெறப்பட்ட உறுதியான மற்றும் கனிவான ஆதரவின் காரணமாக விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருகிறது.

சிறைத்துறை பணியாளர்களின் மன உறுதியை மேம்படுத்தி, அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில், சிறைப்பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, குடியிருப்பு வளாகங்களில் குடிநீர் சுத்தகரிப்பு இயந்திரங்கள் நிறுவி சுத்தமான குடிநீர் வழங்குதல், மருத்துவ உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறை நிருவாகம் சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன், மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சிறைவாசிகளின் சீர்திருத்தம், புனர்வாழ்வு மற்றும் மறுஒருங்கிணைப்புக்காக பல்வேறு சீர்திருத்தத் வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

**எஸ். ரகுபதி**
**சட்டத்துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை – I

### சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு

- **காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர்**
  - சிறைத்துறை துணைத் தலைவர் சென்னை சரகம்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை – I, புழல்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை – II, புழல்
    - கண்காணிப்பாளர் பெண்கள் தனிச்சிறை, புழல்
  - சிறைத்துறை துணைத் தலைவர் வேலூர் சரகம்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை வேலூர்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை – கடலூர்
    - கண்காணிப்பாளர் பெண்கள் தனிச்சிறை, வேலூர்
  - சிறைத்துறை துணைத் தலைவர் கோயம்புத்தூர் சரகம்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை, கோயம்புத்தூர்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை, சேலம்
    - கூடுதல் கண்காணிப்பாளர் பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர்
  - சிறைத்துறை துணைத் தலைவர் (தலைமையிடம்)
    - **தலைமை அலுவலகம்**
      - முதுநிலை நிர்வாக அலுவலர்
      - நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
      - நிர்வாக அலுவலர் (தலைமையிடம்)
      - கணக்கு அலுவலர்
      - உதவி இயக்குநர் (உள் தணிக்கை)
      - சட்ட ஆலோசகர்
      - காவல் ஆய்வாளர் (தொழில் நுட்பப் பிரிவு)
      - காவல் ஆய்வாளர் (மோட்டார் வாகனப் பிரிவு)
  - சிறைத்துறை துணைத் தலைவர் திருச்சிராப்பள்ளி சரகம்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி
    - கண்காணிப்பாளர் பார்ஸ்டல் பள்ளி / மாவட்ட சிறை, புதுக்கோட்டை
    - கண்காணிப்பாளர் பெண்கள் தனிச்சிறை, திருச்சிராப்பள்ளி
  - சிறைத்துறை துணைத் தலைவர் மதுரை சரகம்
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை, மதுரை
    - கண்காணிப்பாளர் மத்திய சிறை, பாளையங்கோட்டை
    - கூடுதல் கண்காணிப்பாளர், பெண்கள் தனிச்சிறை, மதுரை
  - தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்
    - மண்டல நன்னடத்தை அலுவலர்கள்
      - நன்னடத்தை அலுவலர்கள்
  - காவல் துறைத் துணை கண்காணிப்பாளர் (உளவு / நுண்ணறிவுப்பிரிவு)

குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

## பிற்சேர்க்கை – II

## சிறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கையின் விவரம்

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்** | |
| 1 | மத்திய சிறை–I, புழல் | 1250 |
| 2 | மத்திய சிறை–II, புழல் | 2000 |
| 3 | பெண்கள் தனிச்சிறை, புழல் | 500 |
| 4 | பார்ஸ்டல் பள்ளி, புழல் (Transit Yard) | 100 |
| 5 | கிளைச்சிறை, சைதாப்பேட்டை | 175 |
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | |
| 6 | கிளைச்சிறை, காஞ்சிபுரம் | 34 |
| | **செங்கல்பட்டு மாவட்டம்** | |
| 7 | மாவட்டச்சிறை, செங்கல்பட்டு | 200 |
| 8 | கிளைச்சிறை, மதுராந்தகம் | 62 |
| | **திருவள்ளூர் மாவட்டம்** | |
| 9 | கிளைச்சிறை, திருவள்ளூர் | 36 |
| 10 | கிளைச்சிறை, பொன்னேரி | 42 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 11 | கிளைச்சிறை, திருத்தணி | 36 |
| 12 | தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி | 152 |
| | **வேலூர் மாவட்டம்** | |
| 13 | மத்திய சிறை, வேலூர் | 2130 |
| 14 | பெண்கள் தனிச்சிறை, வேலூர் | 469 |
| 15 | பார்ஸ்டல் பள்ளி, வேலூர் (இணைப்பு) | 54 |
| 16 | கிளைச்சிறை, குடியாத்தம் | 54 |
| | **திருப்பத்தூர் மாவட்டம்** | |
| 17 | கிளைச்சிறை, ஆம்பூர் | 20 |
| 18 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 74 |
| 19 | கிளைச்சிறை, வாணியம்பாடி | 30 |
| | **ராணிபேட்டை மாவட்டம்** | |
| 20 | கிளைச்சிறை, அரக்கோணம் | 36 |
| 21 | கிளைச்சிறை, வாலாஜா | 19 |
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| 22 | கிளைச்சிறை, செய்யாறு (வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது) | 48 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 23 | கிளைச்சிறை, திருவண்ணாமலை | 49 |
| 24 | கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 17 |
| 25 | கிளைச்சிறை, செங்கம் | 9 |
| 26 | கிளைச்சிறை, போளூர் | 36 |
| 27 | கிளைச்சிறை, வந்தவாசி | 19 |
| | **கடலூர் மாவட்டம்** | |
| 28 | மத்திய சிறை, கடலூர் | 723 |
| 29 | கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| 30 | கிளைச்சிறை, கடலூர் | 143 |
| 31 | கிளைச்சிறை, விருத்தாச்சலம் | 30 |
| 32 | கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை | 24 |
| 33 | பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி | 15 |
| 34 | கிளைச்சிறை, சிதம்பரம் | 28 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | |
| 35 | மாவட்டச்சிறை, விழுப்புரம் | 200 |
| 36 | கிளைச்சிறை, விழுப்புரம் | 42 |
| 37 | கிளைச்சிறை, திண்டிவனம் | 29 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 38 | பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி | 80 |
| | **கள்ளக்குறிச்சி மாவட்டம்** | |
| 39 | கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| 40 | கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| 41 | கிளைச்சிறை, திருக்கோவிலூர் | 24 |
| | **சேலம் மாவட்டம்** | |
| 42 | மத்திய சிறை, சேலம் | 1431 |
| 43 | மாவட்டச்சிறை, ஆத்தூர் | 200 |
| 44 | திறந்தவெளிச்சிறை, சேலம் | 10 |
| 45 | தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள்) | 110 |
| 46 | பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி | 27 |
| 47 | கிளைச்சிறை, ஓமலூர் | 48 |
| | **நாமக்கல் மாவட்டம்** | |
| 48 | கிளைச்சிறை, நாமக்கல் | 34 |
| 49 | பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி | 16 |
| 50 | கிளைச்சிறை, ராசிபுரம் | 24 |
| 51 | கிளைச்சிறை, திருச்செங்கோடு | 19 |
| | **தருமபுரி மாவட்டம்** | |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 52 | மாவட்ட சிறை, தருமபுரி | 200 |
| 53 | கிளைச்சிறை, தருமபுரி | 36 |
| 54 | கிளைச்சிறை, அரூர் | 48 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| 55 | கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| 56 | கிளைச்சிறை, ஊத்தங்கரை | 16 |
| 57 | கிளைச்சிறை, ஓசூர் | 44 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 58 | மத்திய சிறை, கோயம்புத்தூர் | 2124 |
| 59 | பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர் | 187 |
| 60 | திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர் | 100 |
| 61 | கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 36 |
| 62 | பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி | 97 |
| | **ஈரோடு மாவட்டம்** | |
| 63 | மாவட்டச்சிறை, கோபிசெட்டிபாளையம் | 200 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 64 | கிளைச்சிறை, ஈரோடு | 35 |
| 65 | கிளைச்சிறை, சத்தியமங்கலம் | 16 |
| 66 | கிளைச்சிறை, பவானி | 24 |
| 67 | கிளைச்சிறை, பெருந்துறை | 8 |
| | **நீலகிரி மாவட்டம்** | |
| 68 | கிளைச்சிறை, உதகமண்டலம் | 35 |
| 69 | கிளைச்சிறை, குன்னூர் | 32 |
| 70 | கிளைச்சிறை, கூடலூர் | 28 |
| | **திருப்பூர் மாவட்டம்** | |
| 71 | மாவட்டச்சிறை, திருப்பூர் | 200 |
| 72 | கிளைச்சிறை, அவினாசி | 70 |
| 73 | கிளைச்சிறை, திருப்பூர் | 90 |
| 74 | கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை | 25 |
| 75 | கிளைச்சிறை, தாராபுரம் | 26 |
| 76 | கிளைச்சிறை, பல்லடம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 24 |
| | **திருச்சி மாவட்டம்** | |
| 77 | மத்திய சிறை, திருச்சி | 2517 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 78 | பெண்கள் தனிச்சிறை, திருச்சி | 600 |
| 79 | கிளைச்சிறை, மணப்பாறை | 14 |
| 80 | கிளைச்சிறை, முசிறி | 17 |
| 81 | கிளைச்சிறை, துறையூர் | 17 |
| 82 | கிளைச்சிறை, லால்குடி | 23 |
| | **அரியலூர் மாவட்டம்** | |
| 83 | பார்ஸ்டல் பள்ளி, அரியலூர் | 21 |
| 84 | கிளைச்சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| | **பெரம்பலூர் மாவட்டம்** | |
| 85 | கிளைச்சிறை, பெரம்பலூர் | 18 |
| | **கரூர் மாவட்டம்** | |
| 86 | கிளைச்சிறை, கரூர் | 36 |
| 87 | கிளைச்சிறை, குளித்தலை | 26 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்** | |
| 88 | மாவட்டச்சிறை, புதுக்கோட்டை | 245 |
| 89 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 200 |
| 90 | கிளைச்சிறை, அறந்தாங்கி | 28 |
| 91 | கிளைச்சிறை, திருமயம் | 14 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 92 | கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 8 |
| | **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| 93 | கிளைச்சிறை, திருவிடைமருதூர் | 51 |
| 94 | பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் | 87 |
| 95 | கிளைச்சிறை, பாபநாசம் | 46 |
| 96 | கிளைச்சிறை, பட்டுக்கோட்டை | 38 |
| 97 | கிளைச்சிறை, கும்பகோணம் | 44 |
| | **நாகப்பட்டினம் மாவட்டம்** | |
| 98 | மாவட்டச்சிறை, நாகப்பட்டினம் | 200 |
| 99 | கிளைச்சிறை, சீர்காழி | 28 |
| 100 | கிளைச்சிறை, மயிலாடுதுறை | 24 |
| 101 | கிளைச்சிறை, தரங்கம்பாடி | 12 |
| | **திருவாரூர் மாவட்டம்** | |
| 102 | கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| 103 | கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி | 28 |
| 104 | கிளைச்சிறை, நன்னிலம் | 24 |
| 105 | கிளைச்சிறை, மன்னார்குடி | 19 |
| | **மதுரை மாவட்டம்** | |
| 106 | மத்திய சிறை, மதுரை | 1252 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 107 | பெண்கள் தனிச்சிறை, மதுரை | 262 |
| 108 | பார்ஸ்டல் பள்ளி, மேலூர் | 48 |
| 109 | கிளைச்சிறை, உசிலம்பட்டி | 18 |
| 110 | கிளைச்சிறை, திருமங்கலம் | 25 |
| | **திண்டுக்கல் மாவட்டம்** | |
| 111 | மாவட்டச்சிறை, திண்டுக்கல் | 200 |
| 112 | கிளைச்சிறை, வேடசந்தூர் | 16 |
| 113 | கிளைச்சிறை, பழனி | 43 |
| 114 | கிளைச்சிறை, கொடைக்கானல் | 9 |
| 115 | கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |
| | **தேனி மாவட்டம்** | |
| 116 | மாவட்டச்சிறை, தேனி | 200 |
| 117 | கிளைச்சிறை, உத்தமபாளையம் | 21 |
| 118 | கிளைச்சிறை, பெரியகுளம் | 39 |
| | **சிவகங்கை மாவட்டம்** | |
| 119 | கிளைச்சிறை, சிவகங்கை | 20 |
| 120 | கிளைச்சிறை, திருப்பத்தூர் | 22 |
| 121 | திறந்த வெளிச்சிறை, புரசடைஉடைப்பு | 150 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 122 | மாவட்டச்சிறை, இராமநாதபுரம் | 200 |
| 123 | கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்) | 18 |
| 124 | மாவட்டச்சிறை, முதுகுளத்தூர் | 21 |
| 125 | கிளைச்சிறை, திருவாடனை | 12 |
| | **விருதுநகர் மாவட்டம்** | |
| 126 | மாவட்டச்சிறை, விருதுநகர் | 200 |
| 127 | கிளைச்சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| 128 | கிளைச்சிறை, ஸ்ரீ வில்லிபுத்தூர் | 24 |
| 129 | கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது) | 29 |
| | **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 130 | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 1332 |
| 131 | தனிக்கிளைச்சிறை கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |
| 132 | கிளைச்சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| 133 | பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி | 107 |
| | **தென்காசி மாவட்டம்** | |
| 134 | கிளைச்சிறை, தென்காசி | 44 |

| வ. எண். | சிறைகள் | அடைப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 135 | கிளைச்சிறை, சங்கரன்கோவில் | 12 |
| | **தூத்துக்குடி மாவட்டம்** | |
| 136 | மாவட்டச்சிறை, பேரூரணி | 200 |
| 137 | கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம் | 72 |
| 138 | கிளைச்சிறை, கோவில்பட்டி | 42 |
| 139 | கிளைச்சிறை, திருச்செந்தூர் | 37 |
| | **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| 140 | மாவட்டச்சிறை, நாகர்கோவில் | 230 |
| 141 | கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்) | 24 |
| 142 | கிளைச்சிறை, குழித்துறை | 16 |
| | **மொத்தம்** | 24,342 |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.11.2022 அன்று 12 மாவட்ட சிறை வளாகங்களில்
"சோதனை அடையாள அணி வகுப்பு அறை"யினை திறந்து வைத்தார்.






46-வது சென்னை புத்தக கண்காட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.01.2023 அன்றும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் 19.01.2023 அன்றும் சிறை நூலகங்களுக்கான புத்தகங்களை நன்கொடையாக வழங்கினார்கள்.



சிறை பாதுகாப்பினை மேம்படுத்திட புழல், மத்திய சிறை-1-க்கு 5 உடல் அணிந்த கேமராக்கள்
8.12.2022 அன்று வழங்கப்பட்டன.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.